In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No :MCOP.125/2022
Deposition of P.W.2
****

Name திரு.சபரி மகாராஜன்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 25th day of June 2024.

**முதல் விசாரணை :**

நான் முதன்மை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்று உறுதி கூறுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**குறுக்கு விசாரணை (1ம் எதிர்மனுதாரர் தரப்பில்)** –

நான் தற்போது Dish Antenna மாட்டும் வேலை செய்கிறேன். விபத்து சமயத்திலும் அதே வேலை தான் சொந்தமாக செய்தேன். பொட்டல்காடில் இருந்து திரும்ப வரும் போது வாகனத்தில் வந்தேனா, நடந்து வந்தேனா என்று முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அந்த நேரத்தில் அங்கு இல்லை என்றாலும், அதனால் தான் எந்த வாகனத்தில் வந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ காலத்தில் அது இருவழிச் சாலை தான், அது நான்கு வழிச்சாலை அல்ல. நான் எவ்வளவு தூரத்தில் இருந்து சம்பவத்தை பார்த்தேன் என்று, தூரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த உடன் நானும், பக்கத்தில் இருந்த ே ஹாட்டல்காரரும் பக்கத்தில் சென்று பார்த்தோம். பக்கத்தில் இருந்தவர் ஆம்புலன்சிற்கு போன் செய்தார். காயமடைந்த நபரின் உறவினர்கள் யாருக்கும் நான் போன் செய்யவில்லை. நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும், 1ம் மனுதாரருக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)** -

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. 1வது மனுதாரர் கேட்டுக் கொண்டதின் பேரில் சாட்சியம் கூற வந்துள்ளேன். மாசானம் என்பவரிடம் 1வது மனுதாரர் சொல்லி நான் இன்று சாட்சியம் கூற வந்துள்ளேன். மாசானமும், 1வது மனுதாரரும் சொந்தக்காரர்கள். மாசானம் நீதிமன்றம் வரவில்லை. நான் வக்கீல் ஆபிஸ் சென்றேன், நான் சொல்ல, சொல்ல வாக்குமூலம் தயார் செய்தார்கள். 2019ல் விபத்து நடந்தது. 4,5 வருடம் இருக்கும். போலீஸ் என்னை விசாரிக்கவில்லை. நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும், 1வது மனுதாரரின் உறவினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இறந்த நபர் ஓட்டி சென்ற வாகனம் பல்சர் வாகனம். இருசக்கர வாகனத்தின் முன்புறம் சேதாரம் ஆகிவிட்டது. அந்த கார் சிகப்பு கலர். அங்கு ஒரு ேஹாட்டல் இருந்தது, ஒரு பெட்டிக்கடை இருந்தது. பேங்க் ஒன்று மேற்கு பக்கம் இருந்தது. ேஹாட்டல் கிழக்கு பக்கம் இருந்தது. நான் அன்று தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தேன். வடக்கே இருந்து தெற்கு பார்த்து கார் வந்தது. கார் நான் பார்த்த போது Overtake செய்தது. இன்டிகேட்டர் போடாமல் திரும்பிவிட்டது. ரோட்டின் கிழக்கு பக்கம் தான் விபத்து ஏற்பட்டது. நான் விபத்தை பார்க்கவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆம்புலன்சில் ஏற்றும் போது அந்த நபருக்கு உயிர் இருந்தது. எனது வாக்குமூலத்தில் அதை சொல்லவில்லை. நான் வாக்குமூலத்தில் சம்பவ இடத்திலேயே அந்த நபர் இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன். 108 வாகனத்தில் இறந்து போன நபரை ஏற்ற மாட்டார்கள் என்று சொல்வது பற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை - இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

Sd/-K.Ayyappan,
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**